# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

27.01.2017

**செ.வெ.எண்: 59**

## <u>வேளாண்மைத் துறை</u>

கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் 27.01.2017 இன்று வேளாண்மைத்துறையின் மூலம் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விவசாயிகளிடம் மனுக்கள் பெற்று மனுதாரர் முன்னிலையில் விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு உத்திரவிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 652.20 மி.மீ ஆகும். நடப்பு ஜனவரி-2017 மாதம் முடிய கிடைக்க வேண்டிய சராசரி மழையான 9.00 மி.மீக்கு இதுவரை 10.28 மி.மீ மழை மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளது.

நடப்பாண்டு கரூர் மாவட்டத்தில் நெல் 3554 ஹெக்டரும், சிறுதானிய பயிர்கள் 9857 ஹெக்டர், பயறு வகை பயிர்கள் 5197 ஹெக்டர், எண்ணெய்வித்து பயிர்கள் 3377 ஹெக்டர், கரும்பு நடவு 347 ஹெக்டர், கரும்பு மறுதாம்பு 1737 ஹெக்டர் மற்றும் தோட்டக்லைப்பயிர்கள் 10729 ஹெக்டர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால், தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களும் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறையினரால் விரிவான பயிர்சேத கணக்கெடுப்பு (Detailed Enumeration) பணி கிராமங்கள் தோறும் நடைபெற்று வருகிறது.

இம்மாவட்டத்தில் அனைத்து தனியார் உரக்கடைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன்சங்கத்தில் யூரியா-1528 மெ.டன், டிஏபி-489 மெ.டன், பொட்டாஷ்-738 மெ.டன், கலப்பு உரம் - 1087 மெ.டன் இருப்பில் உள்ளது.

தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக 10074 விவசாயிகளுக்கு இதுவரையில் ரூ.7374 கோடி பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

## தோட்டக்கலைத்துறை

கரூர் மாவட்டத்தில் தோட்டக்கலைதுறை மூலம் நடப்பாண்டில் 2016-17ம் ஆண்டுக்கு ரூ.54.36 இலட்சம் நிதி இலக்கு ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் பெறப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு 40 சத மானியத்தில் காய்கறி விதைகள் மற்றும் பழச்செடிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மா, கொய்யா, காய்கறிகள், மலர்கள் மற்றும் வாசனைப் பயிர்கள் பரப்பு விரிவாக்கம், நிலப்போர்வை அமைத்தல் (Mulching) பந்தல் காய்கறிகள் சாகுபடி (Pandhal cultivation) தேனி வளர்ப்பு, வீட்டு காய்கறி தோட்டம் அமைத்தல் போன்றவற்றிற்கு ரூ59.17 இலட்சம் பெறப்பட்டு 50% மானியத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய மானாவாரி பகுதி மேம்பாட்டு திட்டத்தில் தோட்டக்கலை சார்ந்த பண்ணையம் அமைக்க நடப்பாண்டில் 300 எக்டர் பரப்பளவில் கரூர் மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, தேவைப்படும் விவசாயிகள் அருகில் உள்ள வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் அலுவலகத்தை அணுகி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் நடப்பு ஆண்டிற்கு (2016-17)ல் குறைந்த தண்ணீரில் அதிக பரப்பளவில் தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக நுண்ணீர் பாசனக் கருவிகள் சிறு/குறு விவசாயிகளுக்கு 100 சத மான்யத்திலும், இதர விவசாயிகளுக்கு 75% மானியத்தில் அரசு அங்கீகரிக்கப்பட்ட நுண்ணீர்பாசன நிறுவனத்தின் மூலம் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும் சிறப்பினத்தின் கீழ் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 100% மற்றும் 75% மான்யத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்து தரப்படவுள்ளது. இதற்காக ரூ.602.49 இலட்சம் இத்திட்டத்தில் பெறப்பட்டுள்ளது. எனவே பழச்செடிகள், காய்கறிவிதைகள் மற்றும் நுண்ணீர் பாசனக்கருவிகள் தேவைப்படும் விவசாயிகள் அருகில் உள்ள வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் அலுவலகத்தை அணுகி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## வேளாண்மை பொறியியல் துறை

தமிழக முதல்வரின் சிறப்புத் திட்டமான பாசனத்திற்கான சோலார் பம்புகளுடன் நுண்ணீர் பாசன வசதி அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் 2015-16ம் நிதியாண்டில் ஆழ்குழாய் கிணறு பிரிவில் சோலார் பம்ப்செட் 8 எண்கள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. சூரிய ஒளியால் இயங்கும் மின்மோட்டார் தேவைப்படும் விவசாயிகள் விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. சோலார் உலர்த்தி அமைத்தல் திட்டத்தில் (Solar Drier) 2016-17ம் ஆண்டிற்கு 2 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

**<u>வேளாண் விற்பனை மற்றும் வணிகம்.</u>**

கரூர் மாவட்டத்தில் விவசாயிகளின் ஆன்ட்ராய்டு மொபைலில் "கிஸான் சுவேதா மொபைல் ஆப்ஸ்" பதிவிறக்கம் செய்யப்பட்டு அதன் மூலம் விவசாயிகள் தங்கள் விளை பொருட்களுக்கான சந்தை நிலவரம், ஏற்றுமதி விவரம், உரங்கள் பற்றிய விவரங்கள் ஆகியவற்றைப் பற்றி தெரிந்து கொள்ள வட்டார வாரியாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

கரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு அதிகபட்சம் ரூ.2 இலட்சம் பொருளீட்டுக் கடன் 5% வட்டியிலும், வியாபாரிகளுக்கு 9% வட்டியில் அதிகபட்சம் 2 இலட்சம் பொருளீட்டுக் கடன் பெறலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இராயனூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள 25 மெ.டன் கொள்ளளவுள்ள குளிர்பதனக் கிடங்கில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை சேமித்து பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எனவே, கரூர் மாவட்ட விவசாயிகள் அந்தந்த துறையை அணுகி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

**செய்தி வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர் .**